| முதல் திருப்புதல் தேர்வு - 2025 | தேர்வு எண் |
|---|---|
| காலம் : 3.00 மணி | XI - தமிழ் | மதிப்பெண் : 90 |

## பகுதி - 1

குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடைதருக. (14x1=14)

ii) ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. பாயிரம் இல்லது ________ அன்றே
அ) காவியம்
ஆ) பனுவல்
இ) பாடல்
ஈ) கவிதை

2. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்களின் எண்ணிக்கை ________
அ) 22 ஆ) 24
இ) 23 ஈ) 25

3. தமிழ்நாட்டின் மாநில மரம்
அ) மா
ஆ) பலா
இ) வாழை
ஈ) பனை

4. "வான் பொய்த்தது" - என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப்பொருள்
அ) வானம் இடித்தது
ஆ) மழை பெய்யவில்லை
இ) மின்னல் வெட்டியது
ஈ) வானம் என்பது பொய்யானது

5. "சேயோன் மேய மை வரை உலகம்" என்று குறிப்பிடும் நூல்
அ) அகத்தியம்
ஆ) திருமலை முருகன் பள்ளு
இ) நன்னூல்
ஈ) திருமுருகாற்றுப்படை

6. எதிர்கால இடைநிலைகள்
அ) த், ட், ற்
ஆ) ற், ன்
இ) கிறு, கின்று
ஈ) ப், வ்

7. ஒட்டுப் போடாத
ஆகாயம் போல இந்த
உலகமும் ஒன்றுதான் இக்கவிதையில் பயின்று வருவது
அ) உவமை
ஆ) உருவகம்
இ) உள்ளுறை
ஈ) இறைச்சி

8. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு
அ) மொழிபெயர்ப்பாளர்
ஆ) இந்தியாவின் பெப்பிசு
இ) தலைமைத் துவிபாஷி
ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை



www.Padasalai.Net

Scanned with OKEN Scanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

9. அகநானூற்றின் வேறுபெயர்
அ) நெடுங்கணக்கு
ஆ) குறுங்கணக்கு
இ) நெடுந்தொகை நானூறு
ஈ) குறுந்தொகை நானூறு

10. பெண்கள் விளையாடும் விளையாட்டுகளில் ஒன்று
அ) சாழல் ஆ) சிற்றில்
இ) சிறுதேர் ஈ) சிறுபறை

11. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லை தேர்க
அ) காவலாளி ஆ) மேலாளர்
இ) உதவியாளர் ஈ) ஆசிரியர்

12. பூஜை, விஷயம், உபயோகம் என்பவை முறையே ______ என்று தமிழில் வழங்கப்படும்
அ) வழிபாடு, செய்தி, பயன்பாடு
ஆ) பயன்பாடு, வழிபாடு, செய்தி
இ) வழிபாடு, பயன்பாடு, செய்தி
ஈ) செய்தி, பயன்பாடு, வழிபாடு

13. பத்திகளுக்கிடையில், வரிகளுக்கிடையில் சொற்களுக்கிடையில் இடைவெளி தருக. என்பதை குறிக்கும் மெய்ப்புத் திருத்தக் குறியீடு
அ) D ஆ) ^
இ) G ஈ) #

14. காட்டின் மூலவர் என அழைக்கப்படும் விலங்கு
அ) சிங்கம் ஆ) புலி
இ) யானை ஈ) கரடி

## பகுதி - 2
### பிரிவு - 1

***குறிப்பு: எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.*** ***(3x2=6)***

15. இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வை - குறிப்பிடுக.
16. மனைமருட்சி - துறையை கூறு.
17. மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் - கூற்றினை உறுதிபடுத்துக.
18. மருத்துவத்தின் பிரிவுகளாகக் குறள் கூறுவன யாவை?

### பிரிவு - 2

***குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.*** ***(2x2=4)***

19. "கோட்டை" என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?
20. இந்தியக் கட்டடக்கலையின் 3 வகைகள் யாவை?
21. நாட்டுப்புறத்திலும், பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாகத் தாகூர் எவற்றைக் கூறுகிறார்?

### பிரிவு - 3

***குறிப்பு: எவையேனும் ஏழனுக்கு விடை தருக.*** ***(7x2=14)***

*22.* ***ஏதேனும் இரண்டிற்கு இலக்கணக் குறிப்பு தருக.***
மாநகர், செங்கயல், இடன், பிழையா

*23.* ***ஏதேனும் ஒன்றினுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக.***
அ) ஈன்ற
ஆ) பிரிந்த

11-தமிழ்-2

Scanned with OKEN Scanner

24. *ஏதேனும் ஒன்றினுக்கு புணர்ச்சி விதி தருக.*
அ) அணிந்துரை
ஆ) பெருங்கடல்

25. *கலைச்சொல் தருக.*
அ) CULTURE
ஆ) MYTH

26. *சொல்லை சேர்த்தும், பிரித்தும் தொடரமைக்க.*
தங்கை *(அல்லது)* வைகை

27. *பிறமொழிச் சொற்களை தமிழ்ப்படுத்துக.*
வாடகை, விசா

28. *மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.*
பொரி, பொறி

29. *மரபுச் சொற்களை தொடரில் அமைத்து எழுதுக.*
அ) நிறைகுடம்
ஆ) கானல்நீர்

30. *வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.*
கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்

## பகுதி – 3
### பிரிவு – 1

*குறிப்பு: எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.* *(2x4=8)*

31. தமிழ்ப் பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து – விளக்குக.
32. மாணவர்கள் எவ்வாறு கற்க வேண்டுமென தொல்காப்பிய சிறப்புப் பாயிரம் விளக்குகிறது?
33. சிங்கி பெற்ற பரிசுபொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?
34. வாய்க்காலின் சிறப்புகளாக மனோன்மணீயம் குறிப்பிடுவன யாவை?

### பிரிவு – 2

*குறிப்பு: எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.* *(2x4=8)*

35. பேச்சுமொழி, எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?
36. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.
37. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.
38. ஜீவாவின் பேச்சுநடை குறித்து சுந்தரராமசாமி கூறுவன யாவை?

### பிரிவு – 3

*குறிப்பு: எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.* *(3x4=12)*

39. அ) தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.

*– இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை சுட்டி விளக்குக.*

*(அல்லது)*

ஆ) சொற்பொருள் பின்வரு நிலையணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

40. ***இலக்கிய நயம் பாராட்டுக.***

***(மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக.)***

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்;
மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்.
கண்கள் இரண்டினில் ஒன்றைக் குத்திக்
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
பேதைமை யற்றிடும் காணீ.

-பாரதியார்.

41. ***தமிழாக்கம் தருக.***

1) Knowledge rules the world.
2) Culture does not make people. People make culture.
3) Nobody can hurt me without my permission.
4) A picture is worth a thousand words.

42. ***பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.***

1) கற்றது கைம்மண் அளவு கல்லாதது உலகளவு

***(அல்லது)***

2) போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து.

43. அ) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

***(அல்லது)***

ஆ) ஆசிரியப்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

பகுதி - 4

***குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (3x6=18)***

44. அ) பௌத்தக் கல்வி, சமணக் கல்வி, மரபுவழிக்கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரி.

***(அல்லது)***

ஆ) 'கல்லும் கதை சொல்லும்' என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.

45. அ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்கவும்.

***(அல்லது)***

ஆ) பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

46. அ) தமிழர் வாழ்வோடும் புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ.முத்துலிங்கம் திணைப்பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது? (ஆறாம் திணை)

***(அல்லது)***

ஆ) நர்த்தகி நடராஜின் நேர்காணல்வழி அறிந்தவற்றைத் தொகுத்து அளிக்க.

பகுதி - 5

47. ***அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. (4+2=6)***

அ) 'உண்டால் அம்ம'..... - எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) 'பகை' - என முடியும் திருக்குறளை அடிபிறழாமல் எழுதுக.



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com